# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2023 சனவரி

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

## பகுதி - A

**வினா இல 01**

இவ்வினா 25 புள்ளிகளுக்கான கட்டாய வினாவாகும். 2020ம் ஆண்டின் பாடத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடமான **உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்** தொடர்பான முழுமையான அறிவை மதிப்பிடுவதற்கானதாகும். இக் கேள்விக்கான முழுமையான புள்ளிகளை ஒரு சில மாணவர்களே முழுமையான புள்ளிகளை பெற்றுள்ள நிலையில் அனேகமான மாணவர்கள் 10 - 20 வரையிலான புள்ளிகளையே பெற்றுள்ளனர். அத்தோடு மிக சொற்ப அளவு மாணவர்களே 05 க்கும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

விடைத்தாள் மதிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட பொதுவான பலவீனங்கள் / குறைபாடுகள் வருமாறு

**(1.1)** வினாவானது கிரயமத்தி தொடர்பான உதாரணத்தை பரிசீலிப்பதற்கானது பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளதோடு சில பரீட்சார்த்திகள் கிரயமத்தியினை சரியாக இனங்காண தவறியுள்ளனர். சரியான விடை (2) ஆகும்.

**(1.2)** இவ் வினாவானது குறிப்பிட்ட வருடத்திற்கான முற்கொடுப்பனவுகள் மற்றும் அட்டுறு செலவுகள் பற்றியதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளதோடு சிலர் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெறத் தவறியுள்ளனர்.

**(1.3)** இவ் வினாவானது VAT வரியின் உள்ளீடு மற்றும் வெளியீடு கணிப்புக்களை பற்றியதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளிக்க தவறியுள்ளனர்.

**(1.4)** வினாவானது கிரய முறைகள் தொடர்பான பரீட்சார்த்திகள் விசேட கட்டளைகள் பற்றியது. அனேகமான பரீட்சார்த்திகள் 02 புள்ளிகளையும் முழுமையாக பெற்றுள்ளதோடு மிகச் சொற்ப அளவிலானோர் கிரய முறைகள் தொடர்பான விசேட கட்டளைகளை இனங்கான தவறியுள்ளனர்.

இவ் வினாவானது 1890ம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவின் ஏற்பாடு பற்றியதாகும். அனேகமான பரீட்சார்த்திகளின் விடைகள் திருப்திகரமாக இருந்தது. சரியான விடை (3) ஆகும்.

**(1.5)** இவ் வினாவானது தியாகம் செய்த பங்கு தொடர்பான அறிவை பரீட்சிக்கும் வகையில் அமைந்தது. கணிதபாட அறிவின் குறைப்பாட்டால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகளை பெறத் தவறியுள்ளனர். ஆனாலும் சிலர் தியாகம் செய்த பங்கின் விகிதம் 1/6 எனக் கணித்து சரியாக விடையளித்துள்ளனர்.

(1.6) இவ் வினாவானது நிதிக் கூற்றுக்களின் 03 கூறுகளை இனங்காணல் பற்றியது அனேகமான பரீட்சார்த்திகள் நிதிக் கூற்றின் கூறுகளை இனங்கான தவறியுள்ளதோடு வெகு சிலரே நிதி நிலைமைக் கூற்று, முற்றுமடங்கிய வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்பு, உரிமை மாற்றல் கூற்று என்றவாறு சரியாக விடையளித்துள்ளனர்.

(1.7) இவ் வினாவில் ஒரு ஊழியரின் ஒரு நாள் ஊதியத்தைக் கணக்கிட வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சேமிக்கப்பட்ட நேரத்தை (Time Saved) கணக்கிடத் தவறிவிட்டனர். எனவே மிகையூதிய தொகை தவறாக கணக்கிட்டதன் விளைவாக நாளொன்றுக்கான மொத்த வருமானம் சரியாக கணக்கிடப்படவில்லை.

(1.8) இவ் வினாவில் பொதுக் கம்பனி ஒன்றின் பங்கு வழங்கல் தொடர்பான அடிப்படை நாட்குறிப்பேட்டு பதிவினை தயார் செய்ய வேண்டியிருந்தது. சில பரீட்சார்த்திகள் அவசியமான நாட்குறிப்பேட்டு பதிவுகளை தயாரிப்பதை தவிர்த்துள்ளனர். இவ் வினாவானது நாட்குறிப்பேட்டு பதிவுகளை தயாரித்தல் தொடர்பானதாக இருந்த போதும் சில பரீட்சார்த்திகள் வினாவப்படாத ‘‘T’’ கணக்குகளை தயாரித்துள்ளனர்.

(1.9) வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் சூத்திரங்களின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட பொருளின் பொருளாதார கட்டளை கணியத்தினை கணக்கிடுவதற்கான வினாவாக இது அமைந்திருக்கும் சிலர் தரப்பட்ட தரவுகளை சூத்திரத்தில் பிரதியிட தவறியுள்ளனர்.

வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை உரிய வகையில் பின்பற்றாது வினா இல 01 ற்கான விடைகள் யாவும் அவ் வினாத்தாளிலே வழங்கப்பட்டிருந்தன / குறிப்பிடப்பட்டிருந்தன. அத்தோடு சில பரீட்சார்த்திகள் வினாத்தாளை விடைத்தாள் புத்தகத்துடன் இணைத்திருந்ததோடு சிலர் அதனை செய்ய மறந்திருந்தனர்.

**இந்த கேள்விக்கான ஒட்டுமொத்த செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி - B</u>

**வினா இல 02**

இவ்வினாவானது தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வருமதியாளர் அல்லது சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கினையும் தனிவியாபார நிறுவனத்தின் உரிமையாண்மையும் கண்டுப்பிடிக்குமாறு வேண்டி நிற்கிறது. சில பரீட்சார்த்திகள் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதியினை கண்டுப்பிடிக்காததுடன் சில பரீட்சார்த்திகள் நிறுவனத்தின் உரிமையாண்மையினை கண்டுப்பிடிக்கவில்லை. மேலும் சில பரீட்சார்த்திகள் சரியான விற்பனை பெறுமதியினையும் கண்டுப்பிடிக்கவில்லை.

**இந்த கேள்விக்கான ஒட்டுமொத்த செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல 03**

இவ்வினாவானது பங்குடமையின் அடிப்படை அறிவு பற்றியதாகும். பங்குடமையின் இலாப நட்ட பகிர் கணக்கினையும், பங்காளர் நடைமுறைக் கணக்கினையும் தயார் செய்யுமாறு கேட்கப்பட்டது.

பின்வரும் பொதுவான தவறுகள் அவதானிக்கப்பட்டது.

(1) சில பரீட்சார்த்திகள் இலாப பகிர்வினை கணிக்கும் போது பங்காளர்களின் நிர்வாகம் தொடர்பான சம்பளத்தை சீராக்கவில்லை.

(2) கடன் வட்டியானது ஆறு மாதத்திற்கு கணிப்பிடப்படல் வேண்டும். எனினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் பன்னிரண்டு மாத கடன் வட்டியினையே கணிப்பிட்டிருந்தனர்.

(3) இவ்வினாவானது இலாபநோக்கமற்ற நிறுவனத்தின் சந்தாக்கணக்கு மற்றும் வருமான செலவுக் கணக்கு பற்றிய அறிவினை பரீட்சிப்பதாகும்.

**இந்த கேள்விக்கான ஒட்டுமொத்த செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல 04**

இலாப நோக்கமற்ற நிறுவனத்தின் சந்தா கணக்கு மற்றும் வருமான செலவு கணக்கு பற்றிய அறிவினை பரீட்சிப்பதற்கானது.

பின்வரும் பொதுவான தவறுகள் அவதானிக்கப்பட்டது.

(1) சில பரீட்சார்த்திகள் சந்தாப்பணக்கணக்கை சரியாக செய்யப்படவில்லை. மேலும் சில பரீட்சார்த்திகளின் வரவு, செலவு பதிவுகள் முறையாகப் பதியப்படவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் சந்தாப்பணக்கணக்கை தயார் செய்ய முயற்சிக்கவில்லை.

(3) சில பரீட்சார்த்திகள் பெறுவனவு கொடுப்பனவு கணக்கின் ஆரம்ப மீதியனை வருமான செலவு கணக்கின் ஆரம்ப மீதியாக வெளிப்படுத்தியிருந்தனர்.

**இந்த கேள்விக்கான ஒட்டுமொத்த செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல 05**

**(அ)** இவ்வினாவானது நிறையளித்த சராசரி முறையில் களஞ்சியப்பேரேட்டினை தயார் செய்யுமாறு வலியுறுத்துகிறது. பெரும்பலான மாணவர்கள் திருப்திகரமாக விடையளித்துள்ளனர். சில பரீட்சார்த்திகள் களஞ்சியப்பேரேட்டின் ஆரம்ப மீதியான 800 அலகுகளை கருத்திற் கொள்ளாமையினால் சில புள்ளிகளை இழக்க வேண்டியேற்பட்டது.

**(ஆ)** இவ்வினாவானது தேறிய சம்பளத்தை கண்டறிவதற்காக வேண்டப்பட்டது. சில பரீட்சார்த்திகள் ஊழியரின் சேமலாப பங்களிப்பையும், நிறுவன சேமலாப பங்களிப்பையும் சேர்த்துக் கழித்திருந்தனர். மேலும் சில பரீட்சார்த்திகள் வாராந்த உணவிற்கான 2 500 ரூபா கொடுப்பனவினை மாதாந்த கொடுப்பனவாக தவறுதலாக கருதியுள்ளனர்.

**இந்த கேள்விக்கான ஒட்டுமொத்த செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல 06**

**(அ)** இவ்வினாவானது மேந்தலைப் பகிர்வு அட்டவணையை தயார் செய்யுமாறு வலியுறுத்தப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் விடை திருப்திகரமாக அமைந்தது. எனினும் சில பரீட்சார்த்திகள் மேந்தலைப் பகிர்வின் அடிப்படையினை வெளிப்படுத்தவில்லை.
சில பரீட்சார்த்திகள் சேவைத்திணைக்கள மேந்தலையினை உற்பத்தி திணைக்களத்திற்கு மீள்பகிர்வு செய்யவில்லை.

**(ஆ)** இவ்வினாவானது ஒவ்வொரு உற்பத்தித் திணைக்களத்திற்குமான மேந்தலை உறிஞ்சல் வீதத்தை கண்டறியுமாறு வினாவப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையினை கண்டறிந்தனர்.

சில பரீட்சார்த்திகள் நேர்ஊழிய மணித்தியால உறிஞ்சல் வீதத்தை சரியாக கணிப்பிடவில்லை.

**இந்த கேள்விக்கான ஒட்டுமொத்த செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி - C</u>

**வினா இல 07**

இவ்வினாவானது வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பானதாகும். மேலும் வினாவானது **(அ)** மற்றும் **(ஆ)** பிரிவுகளைக் கொண்டது. **(அ) பகுதியானது** முற்றுமடங்கிய வருமானக்கூற்றையும் **(ஆ) பகுதியானது** நிதிநிலைமைக்கூற்றை தயாரிப்பது தொடர்பானதாகும்.

சில பரீட்சார்த்திகள் இவ்வினாவினை தயார்செய்ய முனைப்பு காட்டியுள்ளதுடன் சிலர் முழுப் புள்ளிகளை பெற்றுள்ளனர்.

பின்வரும் பொதுவான தவறுகள் அவதானிக்கப்பட்டது.

**(அ) முற்றுமடங்கிய வருமானக்கூற்றினை தயார்செய்தல்.**

01. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வருமானக்கூற்று மற்றும் நிதிநிலைமைக்கூற்று மாதிரி வடிவங்கள் பின்பற்றப்படவில்லை.

02. சில பரீட்சார்த்திகளினால் சொத்து அகற்றலிலான இலாபத்தை கணிப்பிடப்படவில்லை. மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு சரியாக கணிப்பிடப்படவில்லை.

03. அட்டுறு மின்சாரக் கட்டணம் சரியாக காட்டப்படவில்லை.

04. வருமான வரி சீராக்கம் சரியாக காட்டப்படவில்லை.

05. சில பரீட்சார்த்திகள் செய்கையினை முறையாக சேர்க்கப்படாமையால் அதற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் வழங்கப்படவில்லை.

06. சில பரீட்சார்த்திகள் இறுதி இருப்பு சீராக்கத்தினை சரியாக செய்யவில்லை.

07. சில பரீட்சார்த்திகள் இருப்பு இழப்பினை வியாபார கணக்கில் காட்டியதுடன் சிலப்பரீட்சார்த்திகள் இலாபக் கணக்கில் சரியாக சீராக்கியிருந்தனர்.

**(ஆ) நிதிநிலைமைக்கூற்றினை தயாரித்தல்**

01. சில பரீட்சார்த்திகள் இருப்புக்களின் நிகரிய தேறிய பெறுமதியினை நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்தவில்லை.

02. சில பரீட்சார்த்திகள் ஐயக்கடன் ஏற்பாட்டினை வியாபார வருமதியாளர்களிடமிருந்து கழித்து காட்டவில்லை.

03. சில பரீட்சார்த்திகள் நிதிநிலைமைக்கூற்றில் செலவுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

**இந்த கேள்விக்கான ஒட்டுமொத்த செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

- - -

**பரீட்சையில் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு தேர்வுநாடிகளின் ஆற்றல் மட்டத்தினை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்**

1. பாடநூலை நன்றாகப் படித்து அதன் உள்ளடக்கத்தைக் கசடற கற்றல் வேண்டும்.

2. செயல் வினைச் சொற்களின் வரையறைகளை புரிந்து கொண்டு வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல் செவ்வை நிரலை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க பழக வேண்டும்.

3. கடந்த கால வினாத்தாள்களின் உள்ளடக்கத்தை படிப்பதோடு குறைந்தது இரண்டு தொடக்கம் மூன்று கடந்த கால வினாத்தாள்களை பயிற்சி செய்து வினாக்கள் அமைக்கப்படும் முறைகள் தொடர்பில் தெளிவுற வேண்டும்.

4. கடந்த கால வினாத்தாள்களை நேரத் திட்டமிடலோடு செய்து பார்த்தல் வேண்டும்.

5. நேர்த்தியான கையெழுத்தில் விடைகளை எழுத வேண்டும்.

6. வினாத்தாளில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை விடை எழுத முன் கவனமாக வாசித்தல் வேண்டும்.

7. வினாவை விளங்கிக் கொண்டு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்க மனதை தெளிவாகவும் சமநிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

8. புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கேள்விக்கும் ஆன நேர ஒதுக்கீட்டை தீர்மானித்தல்

9. விடைத்தாள்களை கையளிக்கும் முன் எல்லா வினாக்களுக்கும் சரியாக விடையளிக்கப்பட்டுள்ளதா மேலும் இலக்கங்கள் சரியாக இடப்பட்டுள்ளது என இரு முறை பார்த்தல்.

- * * * -